FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319422

1. District : Coimbatore PS: VBAC Year: 2026 FIR No.: 04/2026/INC/CB Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 16.04.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 25.02.2026, 31.03.2026 & 13.04.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.04.2026 நேரம் 12.15 hrs
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் CD Vol. I நேரம் 12.15 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 7 Km in East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : C/o. Coimbatore City Municipal Corporation, North Zone, Coimbatore
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. V. Arun Prakash (b) Father's/ Husband's Name : T. Venkatachalam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 30/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Private Employee (g) Address : 8th Street, Kongu Nagar, Gandhi Nagar, Peelamedu, Coimbatore.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Dharmaraj Bill Collector, Coimbatore City Municipal Corporation, North Zone, Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delay by the Complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted : Before the Principal District and Sessions Court, Combatore.

Separate Sheets enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. Anupsakaih 16.4.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

R. Ezhilarasi 16/04/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.04.2026 @ 09.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti. Corruption Combatore.
16.04.2026

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2026/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8319422-ன் தொடர்ச்சி.

நேற்று 15.04.2026-ம் தேதி புதன்கிழமை 12.15 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், பீளமேடு, காந்திமாநகர், கொங்கு நகர் 8-வது வீதியை சேர்ந்த T.வெங்கடாசலம் என்பவரது மகன் திரு.V.அருண் பிரகாஷ் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியின் மூலம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அப்புகாரினை படித்து பார்த்தபின், புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோவை மாநகராட்சி வடக்கு மண்டல அலுவலகத்தில் 25-வது வார்டின் வரிவசூலராக பணிபுரிந்து வரும் திரு.தர்மராஜ் என்பவர், திரு.அருண் பிரகாஷ் மற்றும் திருமதி.சுமதி ஆகியோரின் பெயரிலுள்ள சொத்து வரி புத்தகத்தை திரு.அருண் பிரகாஷ் என்பவரிடம் வழங்குவதற்கு ரூ.25,000/- லஞ்சம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்பதும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையிலிருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய போதிய முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியாள ஒப்புதல் பெற்று, இன்று 16.04.2026-ம் தேதி 7.30 கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2026/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.தர்மராஜ் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புனர் V.அருண் பிரகாஷ், வயது 38, த/பெ.T.வெங்கடாசலம், 8-வது வீதி, கொங்கு நகர், காந்திமாநகர், பீளமேடு, கோயம்புத்தூர்-641 004. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். அய்யா/அம்மா, நான் கோயம்புத்தூர் காந்திமாநகரில் உள்ள கொங்கு நகர் 8-வது வீதியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் R.S.புரத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்கான மனையிடமானது கோயம்புத்தூர், கணபதி கிராமம் க.ச.எண்.24 மற்றும் 25-ல் அமைந்துள்ள சைட் எண்.114 ஆகும். அம்மனையிடத்தினை, நான் கோயம்புத்தூர் சரவணம்பட்டியைச் சேர்ந்த சாமிநாத நாயுடு என்பவரின் மகன் ரகுபதி என்பவரிடம் விலைக்கு வாங்கி, அதை கடந்த 03.08.2024-ம் தேதி கணபதி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 5919/2024-ஆக எனது பெயரிலும் எனது மனைவி சுமதியின் பெயரிலும் கிரையம் பெற்று, முறைப்படி அனுமதிபெற்று அந்த இடத்தில் தரைதளத்தில் பார்க்கிங் மற்றும் வாடகைக்கு விடுவதற்காக இரண்டு கடைகளையும், முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் நாங்கள் குடியிருந்து வரும் வீட்டையும் கட்டி முடித்து, கடந்த 15.03.2026-ம் தேதி குடிபுகுந்தோம். மேற்சொன்ன எனது வீடு மற்றும் கடைகள் கோவை மாநகராட்சியின் வடக்கு மண்டலத்தின் 25-வது வார்டில் அமைந்துள்ளது. மேற்படி வீடு மற்றும் கடைகளுக்கு சொத்து வரி நிர்ணயம் செய்வதற்காக நான் கடந்த 11.02.2026-ம் தேதியன்று கோவை மாநகராட்சியின் வடக்கு மண்டல அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பம் செய்தேன். அதனை தொடர்ந்து கடந்த 25.02.2026-ம் தேதி மாலை எங்கள் வார்டின் வரிவசூலரான திரு.தர்மராஜ் என்பவர் என்னை 8667374641 என்ற செல்நம்பரிலிருந்து எனது செல்நம்பர் 9940798841-க்கு தொடர்பு கொண்டு, மேற்சொன்ன எனது வீடு மற்றும் கடைக்கான சொத்து வரியினை நிர்ணயம் செய்துவிட்டதாகவும் அதுதொடர்பான ஆவணங்களை வாங்குவதற்கு வரசொன்னதின் பேரில் நான் அன்றையதினம் கோவை கணபதி சக்தி ரோட்டிலுள்ள Bioline Lab-க்கு அருகில் அவரை நேரில் சந்தித்து ஆவணங்களை வாங்கிக்கொண்டேன். அப்போது வரிவசூலர் திரு.தர்மராஜ் அவர்கள் என்னிடம், மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களான Building License Fee, Vacant Land Tax மற்றும் Property Tax ஆகியவற்றை செலுத்திய பின்பு

சொத்துவரி புத்தகத்தினை தருவதாகவும் அதை வைத்து தான் குடிநீர் இணைப்பிற்கான விண்ணப்பம் செய்ய முடியும் என்றும் அதற்கு தன்னை தனியாக கவனிக்க வேண்டும் என்றும் எவ்வளவு தரவேண்டும் என்பதை பின்னர் தெரிவிப்பதாகவும் என்னிடம் சொன்னார். அதனடிப்படையில் நான் கடந்த 05.03.2026-ம் தேதி Building License Fee Rs.1,08,658/-ஐ செலுத்தினேன். அதன்பின்னர் கடந்த 18.03.2026-ம் தேதி மேற்படி வரிவசூலர் என்னை தொடர்புகொண்டு காலிமனையிட வரிவிதிப்பு எண்ணை என்னிடம் தெரிவித்து அதற்கான வரியினை செலுத்த சொன்னதின் பேரில் நான் 20.03.2026-ம் தேதி Vacant Land Tax Rs.15,120/-ஐ செலுத்திவிட்டு அந்த தகவலை அவரிடம் தெரிவித்தேன். அதன் பின்னர் கடந்த 31.03.2026-ம் தேதி மேற்சொன்ன வரிவசூலர் திரு.தர்மராஜ் அவர்கள் என்னை 9003370565 என்ற செல்நம்பரிலிருந்து என்னை தொடர்பு கொண்டு அன்றைய தினம்தான் சொத்து வரி தொகையை செலுத்துவதற்கான கடைசி நாள் என்றும், அவ்வாறு செலுத்தவில்லை என்றால் அபராதத்துடன் செலுத்த வேண்டுமென்றும், அதனால் சீக்கிரமாக செலுத்திவிடும்படியும் அறிவுறுத்தினார். அதன்படி நான் செல்போனிலேயே அவரிடம் அறிவுரை பெற்றுக்கொண்டே கோவை மாநகராட்சியின் இணையதளத்தின் மூலம் ரூ.11,788/-ஐ சொத்து வரியாக செலுத்தினேன். நான் உரிய கட்டணங்களை செலுத்திமுடித்த பின்பு மேற்சொன்ன வரிவசூலர் திரு.தர்மராஜ் அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை என்பதால் தான் சொத்து வரி புத்தகத்தை தயார் செய்து விட்டு என்னை கூப்பிடுவதாகவும் அதற்கு பணம் தரவேண்டும் என்றும் சொன்னார். உடனே நான் எவ்வளவு தரவேண்டுமென்று கேட்டபோது கடை மற்றும் வீடு அனைத்திற்கும் சேர்த்து தனக்கு தனியாக ரூ.25,000/- கொடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் இருபத்தைந்தாயிரமா கொஞ்சம் பாத்து சொல்லுங்கண்ணா, கடன் வாங்கிதான் அனைத்தையும் செய்து கொண்டிருப்பதாக தெரிவித்தேன். அதற்கு அவர் எல்லா வேலையும் நான் முடிச்சுட்டுதான் கேக்குறேன் என்று சொல்லிவிட்டு பணத்துடன் வரச்சொன்னார். இந்நிலையில் எனது அப்பாவின் உடல்நிலை மிகவும் மோசமானதால் அவரை 06.04.2026-ம் தேதி நான் கோவை கிட்னி சென்டர் மருவத்துவமனையில் அட்மிட் செய்துவிட்டேன். அதன்பின்னர்,

கடந்த 13.04.2026-ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் மேற்சொன்ன வரிவசூலர் திரு.தர்மராஜ் என்னை 9003370565 என்ற செல்நம்பரிலிருந்து அழைத்திருந்தார், அப்போது நான் அலுவலக வேலையாக இருந்ததால் அந்த அழைப்பினை ஏற்க முடியவில்லை. அவரது மிஸ்டு காலின் அடிப்படையில் நான் அவரை சுமார் 11.45 மணியளவில் அவரை தொடர்புகொண்டு பேசினேன். அப்போது அவர் தம்பி முந்தாநாள்தான் Software work ஆச்சு, சொத்துவரிக்கான புத்தகத்தை சனிக்கிழமையே பிரிண்ட் எடுத்து புக்போட்டாச்சு என்றும் தெரிவித்து அதனால்தான் என்னை கூப்பிட்டதாகவும் தெரிவித்து அன்று மதியம் பிரியாக இருந்தால் பணத்துடன் வடக்கு மண்டல அலுவலகத்திற்கு வந்து புக்கை வாங்கிக்கொள்ளுமாறும் சொன்னார். அதற்கு நான் எவ்வளவுங்கண்ணா வருது என்று கேட்டதற்கு கிட்டதட்ட எனது கட்டிடத்தில் கடைக்கு சுமார் 300 சதுர மீட்டர் மற்றும் வீட்டிற்கு சுமார் 2400 சதுரமீட்டர் வருது என்று சொன்னார் அப்போது நான் எவ்வளவுங்கண்ணா என்று கேட்டேன் அதற்கு அவர் கடைக்கு 10 ரூபாய் மற்றும் வீட்டுக்கு 20 ரூபாய் என்றும், கடைக்கும் வீட்டுக்கும் சேர்ந்து நியாயப்படி 30 ரூபாய் ஆகுமென்றும், என்னிடம் குறைவாக 25000 தான் கேட்டுள்ளதாகவும், அந்த பணத்தை கொடுத்துவிட்டு சொத்துவரி புத்தகத்தை தன்னிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படியும் தெரிவித்தார். அதற்கு நான் எனது அப்பா ஒரு வாரமாக மருத்துவமனையில் இருப்பதாக எனது கஷ்டத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் ஹாஸ்பிட்டல்னா செலவு ஆகத்தான் செய்யும் எனவும் அவர் கேட்டபணத்தை கொடுத்துவிட்டு புக்கை வாங்கிக்கொள்ளுமாறு சொல்லி, அந்த அழைப்பை துண்டித்துவிட்டார். மேலும் என்னால் அவர் கேட்ட பணத்தை ரெடிசெய்யமுடியாததால், அன்றைய தினம் மாலை நான் மேற்படி வரிவசூலர் திரு.தர்மராஜ் அவர்களை தொடர்பு கொண்டு எனது அப்பாவை அடுத்த நாள் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்ய இருப்பதால் என்னால் பணத்தை ரெடி செய்ய முடியவில்லை என்றும் மேலும் அவர் கேட்ட பணத்தை எனது உறவினரிடம் வாங்கிதான் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தேன். ஆனால் நான் சொன்ன வார்த்தைகளை வரிவசூலர் திரு.தர்மராஜ் அவர்கள் கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் அவர் கேட்ட லஞ்ச பணத்தை வாங்குவதிலேயே குறியாக இருந்தார். மேலும் அவர் பணத்தை ரெடிபண்ணிவிட்டு அவருக்கு போன்

செய்துவிட்டு வரும்படி என்னிடம் தெரிவித்தார். நான் 14.04.2026-ம் தேதி எனது தந்தையை டிஸ்சார்ஜ் செய்து வீட்டுக்கு அழைத்து வந்தபின் யோசித்து பார்த்ததில், கோவை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் செலுத்திய பின்பும், ரூ.25,000/-ஐ வரிவசூலர் திரு.தர்மராஜ் அவர்களுக்கு லஞ்சமாக கொடுத்து எனது சொத்து வரி புத்தகத்தை அவரிடமிருந்து பெற எனக்கு விருப்பமில்லை. எனவே சொத்துவரி புத்தகத்தை என்னிடம் கொடுப்பதற்கு ரூ.25,000/- லஞ்சமாக கேட்கும் மேற்சொன்ன வடக்கு மண்டல வரிவசூலர் திரு.தர்மராஜ் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நாள்:15.04.2026, இடம்: கோவை இப்படிக்கு, sd.XXXXX (V.Arun Prakash). Respected Madam, Received the complaint on 15.04.2026 at about 12.15 hrs. sd.XXXXX, (R.Ezhilarasi) 15.04.2026, Inspr. VAC. CBE. Respected Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.4/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 16.04.2026 at about 07.30 hrs. sd.XXXXX, (R.Ezhilarasi) 16.04.2026, Inspr. VAC. CBE. இம்முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

16/04/2026

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.